பக்கங்கள் எட்டு

விலை ரூபா: 5.00

# வலம்புரி

VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 15 வியாழக் கிழமை (30-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 346

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
அம்பிகை
களஞ்சியம்
மந்திகை (மார்கட்)
புலோலி
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

★ அநியாய உயிரிழப்புகளை ஏற்படுத்திவரும்

# இனப்பிரச்னையின் தீர்வைநோக்கி ஜனாதிபதியின் சமாதானப்பயணம்!

## உலக நாட்டுத் தலைவர்கள் ஆதரவு!!

(நமது நிருபர்)

நீண்ட காலமாக தீர்த்து வைக்கப்படாமல் இருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவை நாடி ஐரோப்பிய நாடுகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா சுற்றுப் பயணமென்றை மேற்கொண்டுள்ளார்.

இச் சுற்றுப் பயணத்தின் போது இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பது தொடர்பான அரசின் நிலைப்பாட்டை ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி விளக்கி வரும் அதேவேளை, சிங்கஎப் பேரினவாதிகள் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையிலான இனவாதத்தை கிளப்பி வருகிறார்கள்.

சமாதானத்தை காணும் நீண்டபயணம் ஒன்றை ஆரம்பித்து கடந்த வெள்ளிக் கிழமை லண்டனுக்கு ஜனாதிபதி பயணமாகியுள்ளார்.

சமாதானப் பிரியர்களாக கொழும்பு வந்திருந்த பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெயினையும் தென்னாசியவிவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்கசெயலாளர் கார்ல் இன்டர்பேர்த்தையும் கொழும்பில் சந்திக்காத

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை கடல் தளத்தில் இளைஞன் சுட்டுக் கொலை

திருமலை கடற்படைத் தளத்தினுள் ஊடுருவமுயன்ற இளைஞர் ஒருவர் கடற்படையினரல் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இரவு 8.30 மணியளவில் சந்தேகத்திற்கு இடமான முறையில் இளைஞர் ஒருவர் திருமலை கடற்படைத்தளத்தினுள் ஊடுருவமுயன்ற போது சுட்டுக் கொல்லப்பட்டார். சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞரின் சடலம் இதுவரையும் அடையாளம் காணப்படவில்லை. இதனை அடுத்து இவர் விடுதலைப்புலி உறுப்பினராக இருக்காலம் என கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம)

## சித்தாண்டி இளைஞனின் படுகொலை சந்தேகநபர்களான படையினரை சிறுவன் அடையாளம்காட்டினான்

(ஏறாவூர்)

மட்டக்களப்புசித்தாண்டிப் பகுதியில்கடந்த ஒகஸ்ட் மாதம் 9ந் திகதி தலை துண்டிக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட இளம் குடும்பஸ்தர் அ. சந்திரமோகனின் படுகொலையில்சம்மந்தப்பட்ட இரு சூத்திரதாரிகள் நேற்று அடையாளம் காணப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆவணங்களை மீட்பதற்காக சாவகச்சேரி செல்வதற்கு படையினர் அனுமதி

(மந்திகை)

சாவகச்சேரியில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் தங்கியுள்ள வர்த்தகர்களை தமது ஆவணங்களை மீட்பதற்கு சாவகச்சேரி செல்வதற்காக பாதுகாப்பு படையினர் மீண்டும் இன்று முதல் அனுமதி அளித்துள்ளதாக சாவகச்சேரி கைத்தொழில் வணிகக் கழகச் செயலாளர் வ.இராசதுரை தெரிவித்துள்ளார்.

வணிகர் மன்றத்தின் 10 பேர் கொண்ட குழுவினரே ஆவணங்களை மீட்பதற்காக ஒருகுழு ஒருதடவை மட்டும் செல்லமுடியும்.

இதுவரை 150 பேருக்கு மேல், ஆவணங்களை மீட்

→ 8ம் பக்கம் பார்க்க

## பிரபாவின் உரைக்கு சிங்கள மக்கள் வரவேற்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர் தின உரையின் போது குறிப்பிட்ட விடயங்களை வவுனியாவில்உள்ளபெரும்பான்மை இன சிங்கள மக்கள் வரவேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படு

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கடற்புலிகளுக்கு மரியாதைசெலுத்த கடலில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது

(வவுனியா)

கடலில் காவியமான கடற் கரும்புலிகளை நினைவு கூரும் நிகழ்வு மாவீரர் தினமான 27 ஆம் திகதி முல்லைக் கடலில் இடம் பெற்றது.

கடலோரம் இருந்து பார்வையிடக் கூடியவகையில் இந் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. பீரங்கிபொருத்தப்பட்ட மூன்றுபடகுகளும், நிகழ்வை நடத்துவதற்காக மேலும் ஒரு படகும் இதற்குப் பயன்படுத்தப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் உருவாக அனைத்து ஆயுத பிரயோகத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் கருத்து

[யாழ்ப்பாணம்]

கூர்மையடைந்துள்ள பகைமை உணர்வுகள் மறைந்து, போர் நிறுத்தம் உருவாகின்ற சூழ்நிலைக்காக அனைத்து வகையான ஆயுதப் பிரயோகங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களால், 'பகைமை உணர்வுகளை புலிகள் கைவிட வேண்டும்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சுமுகமான சூழ்நிலை மற்றும் நல்லெண்ணம், நிலவும் புறநிலை என்பவற்றில் மக்களின் நலன்களே முன் நிறுத்தப்பட வேண்டும் என்றே நாமும் விரும்புகிறோம்,

குடாநாடு மற்றும் வன்னி உட்பட மக்களின் சுதந்திரமான தரை, கடல், ஆகாய மார்க்கப் போக்குவரத்துக்கு இடையூறுகள் இல்லாமல் இருப்பது, சுமுகமான



நிலையை உருவாக்கும் நோக்குடன் செயற்படும் உள்ளூராட்சி அமைப்புகளின்செயற்பாடுகளுக்கான முட்டுக்கட்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் ஈராக் பயணம்

(கொழும்பு)

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நான்கு நாள் உத்தியோக பூர்வவிஜயமொன்றை மேற்கொண்டு நேற்று ஈராக் சென்றுள்ளார்.

ஈராக் செல்லும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இருதரப்பு நல்லுறவுகள் தொடர்பாகவும், இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகவும் ஈராக்தலைவர்களுடனும், உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என்று இராஜாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## 'லங்காமுடித்த' கப்பல் நாளை புறப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்கான 'லங்கா முடித்த' பயணிகள் கப்பல் சேவை நாளை வெள்ளிக்கிழமை இடம் பெறுமென யாழ் சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இக் கப்பலில் பயணம் செய்ய பயண அனுமதி பயணச்சீட்டுப் பெற்றவர்கள

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நனனெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### மலிவு விலை

பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் நாவல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் அனைத்தும் மலிவாக எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். இன்றே விஜயம் செய்யுங்கள். ஸ்ரீ சக்தி புத்தகசாலை சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்துக்கு அருகாமை ஆடிய பாதம் வீதி திருநெல்வேலி. (கி-1056)

குடும்ப -:

மதுஎதிர்ப்பு இயக்கங்களை ஆரம்பித்து துண்டுப் பிரசுரங்கள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றில் இளைய மட்டங்களிடையே போட்டிகளை நடத்தி அதன் தாக்கத்தை வெளிப்படுத்துதல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு இளைஞனும் தான் முன் மாதிரியாகச் செயற்பட்டுக் காண்பிக்க வேண்டும்.

இவ்வாறு இளைஞர்கள் சேர்ந்து மது மயக்கத்தில் மாண்டு போகும் குடும்பஇயக்கங்களை மீளக் கட்டியெழுப்ப முனைந்தால் குடும்பமும், சமுதாயமும், நாடும்செழிப்புறும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே இன்றே செயற்படத் தொடங்குவோம் நன்றே குடும்பத்தை உருவாக்குவோமாக.

# விரைவில் நஷ்ட ஈடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இறால் பண்ணைகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளபிரதி அமைச்சர் எம். பி. எம் அப்துல்காதர் தெரிவித்துள்ளார்.

வாழைச் சேனைப் பிரதேசத்துக்கு விஜயம் செய்த பிரதி அமைச்சர் இறால் பண்ணையாளர்களைச் சந்தித்துப் பாதிக்கப்பட்ட பண்ணைகளைபார்வையிட்ட போதே மேற்கண்ட உறுதி மொழியை வழங்கி உள்ளார். அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் இறால்கள் அடித்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-60)

# அனுமதி அட்டைகள் தேக்கம்

எதிர்வரும் 11-ம்திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த. (சாதாரணதர) பரீட்சைக்கான இடம்பெயர்ந்த தனிப்பட்டபரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் பல யாழ் பிரதம தபாலகத்தில் தேங்கியுள்ளது. (க-3)

# யாழ்.மாவட்டத்தில் சீரற்ற நிலையில் தொழிற் சங்க செயற்பாடு

## ஆசிரியர்கள் விசனம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணமாவட்டத்தில் ஆசிரியர்களுடைய நலன்களையும் உரிமைகளையும் பேணக்கூடிய வகையில் தொழிற்சங்கச் செயற்பாடுகள் அற்றநிலை இருந்து வருவது குறித்து யாழ் மாவட்ட ஆசிரியர்கள் பத்தியில் பெரும் கவலையும் விசனமும் ஏற்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைப்பாடு மாவட்டத்தில் பலவருடங்களாகநிலவிவருவது பற்றியும். இந்த நிலையை ஆசிரியர்களின் நன்மை கருதி மாற்றியமைக்க வேண்டும் என்ற மனப்பான்மை ஆசிரிய சமுதாயத்தில் வேகமாகப் பரவி வருவது பற்றியும் அறியப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆசிரியப் பணியில் ஈடுபட்டு வருகின்ற 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்கக் கூடிய வகையில் ஆசிரியர்களுக்கான புதிய பலமான தொழிற் சங்கம் ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்வது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை சில ஆசிரியர்கள் தற்போது மாவட்ட ரீதியில்மேற்கொண்டு வருவது பற்றியும் தெரிய வந்துள்ளது. (க-77)

# "வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டரங்கு நிதி"

## 'Valvettithurai Netkolu Public Stadium Fund'

## பணிவான வேண்டுகோள்

### அன்புள்ள சகோதர, சகோதரிகளே!

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குள் அமைந்துள்ள நெற்கொழு
விளையாட்டு மைதானத்தை சர்வதேச தரத்தில் உள்ள பொது விளையாட்டு
மைதானமாக மாற்றியமைப்பது என எமது நகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளது.
மேற்படி மைதானம் சுமார் 240 பரப்புக்காணியில் (15 ஏக்கர்) அமையக் கூடி
யவாறும் நமது தாயகத்தில் தலை சிறந்த விளையாட்டு அரங்குகளில் ஒன்றாகவும்,
இலங்கைத் தீவில் உள்ள விளையாட்டு அரங்குகளில் குறிப்பிடத் தக்க ஒன்றாகவும்
விளங்க வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது.
இந்த மைதானத்தை விஸ்தரிப்பதற்காகத்தேவைப்படும் காணிகளை அன்பளிப்
பாகவோ, காணிகளைக் கொள்வனவு செய்வதன் மூலமாகவோ அல்லது நஷ்ட ஈடு
செலுத்தி காணிகளைச் சுவீகரிப்பதன் அடிப்படையிலோ பெறுவதற்கு நடவடிக்கை
கள் எடுக்கப்பட்டு வருகிறது. இவற்றிற்கான நில அளவை வேலைகள் பூர்த்தியடைந்
துள்ளது மதிப்பீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
உத்தேச மைதான எல்லைக்குள் மலைவேம்பு, தேக்கு ஆகிய இனங்களைச்
சேர்ந்த 200 மரக்கன்றுகள் 21. 11. 2000 ந் திகதி நாட்டப்பட்டுள்ளது. மேலும்
1000 பனம் விதைகள் நாட்டும் வேலைகள் நடைபெற்று வருகிறது.
மேற்படி நோக்கத்தை அடைவதற்காக முதல் கட்டமாக சுமார் ஒரு இலட்சம்
ரூபா மதிப்புள்ள வேலைகள் சிரமதானம் மூலம் பனைமரங்கள், ஏனைய மரங்கள்
மற்றும் பற்றைகளை வெட்டியும் பள்ளங்களை மண் போட்டு நிரப்பியும் செய்யப்
பட்டுள்ளது.
காணிகளைப் பெறுவதற்கும். அதனை அபிவிருத்தி செய்வதற்கும் சுமார் 50
இலட்சம் ரூபா தேவைப்படும் என ஆரம்ப மதிப்பீடுகளின் அடிப்படையில் தெரிய
வந்துள்ளது. இப் பணத்தில் 25 இலட்சம் ரூபா பணத்தை கட்டம். கட்டமாக மேற்
படி வேலைகளுக்கு செலவிடுவது என நகராட்சிமன்றம் தீர்மானித்துள்ளது. மிகுதி
25 இலட்சம் ரூபா பணத்தை பொது மக்களிடம் இருந்து நன்கொடையாக பெறு
வதற்கு எண்ணியுள்ளோம்.
இந்த விளையாட்டு அரங்கை (STADIUM) நிர்மாணிப்பதற்கு 5 கோடி ரூபா
பணம் தேவைப்படலாம் என பூர்வாங்க மதிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளது.
ஊறணி நீரூற்று நீச்சல் தடாகத்தை 5 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கும்
வேலைகள் முடிவடையும் கட்டத்தில் உள்ளது. இவ்வாறாக விளையாட்டுத்
துறையை மேம்படுத்த வேறு பல திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளது.
பொது மக்களிடம் இருந்து பெறப்படும் நிதியை தனியான வங்கிக் கணக்கு
ஒன்றில் வைப்புச் செய்வது என முடிவு செய்யப்பட்டு அதன்படி வல்வெட்டித்துறை
மக்கள் வங்கிக் கிளையில் **'வல்வெட்டித்துறை நெற்கொழு விளையாட்டரங்கு நிதி'**
என்ற பெயரில் நகராட்சி மன்றம் சார்பாக சேமிப்புக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்
பட்டுள்ளது.
இராணுவ நடவடிக்கைகளினால் அழிந்து போன நகரமாகக் காட்சியளிக்
கும் வல்வெட்டித்துறையில் உள்ள (நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட) மக்களி
டம் இருந்து ஆதனவரியை 1983ஆம் ஆண்டிலிருந்து 31-12-1999ஆம் திகதி வரை
அறவிடுவது இல்லையென எமது நகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளது. இதன்
மூலம் எமக்கு சுமார் 25 இலட்சம் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. வரி
நீக்கத்திற்கான உரிய அங்கீகாரம் மாகாண ஆளுநரிடம் இருந்து எதிர்பார்க்கப்
படுகிறது.
இவ்வாறான சூழ்நிலைகள் காரணமாக நகராட்சிமன்றத்திற்கு ஏற்பட்ட
நிதிப்பற்றாக்குறை காரணமாகவே பொதுமக்களிடம் இருந்து நிதியுதவி கோர
வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.
தயவுசெய்து தமது நிதியுதவிகளை **"வல்வெட்டித்துறை நெற்கொழு பொது
விளையாட்டு அரங்கு நிதி"** என்ற பெயரில் வல்வெட்டித்துறை மக்கள்
வங்கிக் கிளையில் உள்ள சேமிப்புக் கணக்கு இல. 17049 க்கு Valvettithu

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.

1. கழிகான் அமைத்தல், ஆதார வைத்தியசாலை [கட்டம் 5] மருத்தித்துறை வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்களப்பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால் 2000 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19 ம் திகதி முற்பகல் 10.30 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் [ICTAD] கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய் ... ஒப்பந்தகாரர்கள் கேள்விப் பத்திரம்

2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் [ICTAD] கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு தரம் எம்-9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவார்.

3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமாக பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 6,000 ஐயும், மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500 ஐயும், யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2000 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12 ம் திகதி பிற்பகல் 4. 45 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

6. இவை தொடர்பான மேலதிக விபரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அலுவலத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

**பொறியியலாளர் இ. சிறீகாந்தா.**
பிரதம பொறியியலாளர்.

பிரதம எந்திரி அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

[கி-1070]

இவ்வாறான சூழ்நிலைகள் காரணமாக நகராட்சி மன்றத்திற்கு ஏற்பட்ட நிதிப்பற்றாக்குறை காரணமாகவே பொதுமக்களிடம் இருந்து நிதியுதவி கோர வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

தயவுசெய்து தமது நிதியுதவிகளை **"வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு அரங்கு நிதி"** என்ற பெயரில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக்கிளையில் உள்ள **சேமிப்புக் கணக்கு இல. 17049 க்கு** Valvettithurai Netkolu Public Stadium Fund' People's Bank, Valvettithurai Branch - Savings Account No. 17049) அனுப்பி வைக்குமாறு பணிவன்பாக வேண்டுகின்றோம்.

இந்த நன்முயற்சிக்கு நிதியுதவியளிப்போர் தமது விபரங்களை, நகர முதல்வர் நகராட்சி மன்றம் வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேலதிக விபரங்களை அறிவதற்கு அலுவலக நேரங்களில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள விரும்புவோர் உள்நாட்டில் இருந்து 070 - 212962 இலக்கத்துடனும், வெளிநாட்டில் இருந்து 00 - 94 - 70 - 212962 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும்.

எமது நகரைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்தின் உதவியை மாத்திரம் நம்பியிராமல் நமக்கு நாமே என்ற அடிப்படையில் பொதுமக்களின் உதவியுடன் செயற்பட வேண்டியுள்ளது.

மேற்படி கணக்கில் இருக்கும் நிதி வேறு திட்டங்களுக்கு பயன்படுத்தப்படமாட்டாது என்ற உறுதி மொழியையும் அளிக்க விரும்புகிறோம்.

பணம் அனுப்பும் ஒவ்வொருவருக்கும் மற்றும் அமைப்புகளுக்கும் தனித் தனியாகப் பற்றுச் சீட்டுக்கள் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

இத் திட்டத்திற்கு நிதியுதவி வழங்குமாறு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வாழும் மக்களை குறிப்பாக வல்வெட்டித்துறைப் பகுதி மக்களை மிகவும் பணிவாக இரு கரம் கூப்பி வேண்டுகின்றோம்.

## நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
## நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!!

எம். கே. சிவாஜிலிங்கம் ஜே. பி. யூ. எம்.
(சமாதான நீதவானும் உத்தியோகப்பற்றற்ற நீதிபதியும்)
நகர முதல்வர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.
27-11-2000.

[கி-1068]

### பேச்சுவார்த்தைக்கான

# சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடாது

# இறுதிவரை நம்பிக்கையுடன் செயற்படுக

## தலைவர் பிரபாவிற்கு யாழ். ஆயர் உருக்கமானகடிதம்

(தென்மராட்சி)

தமிழ் மக்களின் துன்பங்களைக் கண்டு இப்போரைமுடிவுக்குக் கொண்டு வர இணக்கம் தெரிவித்தது எல்லோர் உள்ளத்திலும் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் தந்துள்ளது. பேச்சுவார்த்தைக்கான இச்சந்தர்ப்பத்தை கைநழுவ விடாது இறுதி வரை நம்பிக்கையுடன் தடைகளைக்கண்டு பின்வாங்காது செயல்படுங்கள்.

இவ்வாறு யாழ். கத்தோலிக்க ஆயர் மேதகு தோமஸ் சௌந்கர நாயகம் ஆண்டகை தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எழுதியுள்ள கடிதத்தில தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது போரின் கார்மேகங்கள் சூழ ஏறிகணைவீச்சுக்களின்வெடிச் சத்தங்கள் தொடர்ந்து யாழ்.நகரை அதிர வைக்கும் சூழலில் அச்சத்தோடும் பயத்தோடும் வாழ்கின்ற யாழ். மக்களாகிய எமக்கு உங்களுக்கும் நோர்வே பிரதிநிதிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு நம்பிக்கையின் ஒளிக்கீற்றாகத் தோன்றுகின்றது. நீண்ட காலமாகத் தொடர்ந்து நடைபெறும் போரின்இடம்பெயர்வுகளால் மனம் சோர்வுற்றிருக்கும் யாழ். மக்களுக்கும் பொருளாதாரத் தடையின் இறுக்கத்தினால் துன்புற்று தளர்ந்திருக்கும் வன்னி வாழ்மக்களுக்கும் உங்களின் இந்தச்சந்திப்பு நிச்சயம் ஒரு நம்பிக்கையைத் தந்துள்ளது. தமிழ்ப் பேசும் மக்களின் சொல்லொணாத் துன்பங்கள் கண்டு நீங்கள் இப்போரை முடிவுக்குக்கொண்டு வரபேச்சுவார்த்தைக்குஇணக்கம் தெரிவித்ததுஎம்எல்லோர் உள்ளத்திலும் மன மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

இப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் அரசின் பங்களிப்பு பெரிதாக இருந்தாலும் நீங்களும் சமாதானத்தின் பாதையை மன உறுதியுடன் பின்பற்றி அதற்கான நல் சமிக்கைகளை தோற்றுவித்து யுத்தத்தை முற்றுமுழுதாக முடிவுக்குக் கொண்டு வந்து நிரந்தர சமாதானததை நிலை நாட்ட ஆவன செய்வீர்கள் என நாம் அனைவரும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

காலத்தை வீணடியாமல் அரசும் இவ் அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி இனப்பிரச்சனைக்கான நிரந்தர தீர்வினைக் காண நேர்மையாக உழைக்க எம்மால் முடிந்த அனைத்து அழுத்தங்களையும் கொடுப்போம் என உறுதிகூறுகிறோம்.

நீங்கள் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைப் பெற்று நிரந்தரமான நல்லதொரு தீர்வினைக் காண எமது எல்லாவிதமான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் தருவோம் என உறுதி கூறுகிறோம்.

நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இப் பேச்சுவார்த்தைக்கான அரிய சந்தர்ப்பத்தை கை நழுவ விடாது இறுதி வரையும் நம்பிக்கையுடன் தடைகளைக் கண்டு பின் வாங்காது செயற்படவும் முயற்சிகளில் முழுப் பயனைக் காணவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்

இப்படி ஆயரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பான வேண்டுகோள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிற்கும் யாழ். சத்தோலிக் ஆயர்கடிதம் எழுதியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 77

## கட்டுரை சுவரொட்டி போட்டிகள்

(தென்மராட்சி)

மனித முன்னேற்ற நடு நிலைய (கியூடெக்) குடி போதை தவிர்ப்புக்கான விழிப்புணர்வு குழு கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகளை 18 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் வெளியார் மட்டத்தில் நடத்தவுள்ளது.

குடியைக் கெடுக்கும் குடி, உடலுள சமூக நலனுக்காய் குடிபோதையை தவிர்ப்போம், நற்சமூகம் மலர குடி போதையை ஒழிப்போம் ஆகிய விடயங்களில் மேற்படி போட்டிகள் இடம்பெறும்.

(உ-77)

### நீர் விநியோகம் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் பொது நீர்விநியோகத் திட்டங்கள் காத்தான்குடி நகர சபைப் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக சபையின் பொது முகாமையாளர் எஸ். வீரரத்தினம் தெரிவித்துள்ளார்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாவின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் பல இலட்சம் ரூபாய் செலவில் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.(ச-60)

## அதிகாரி முக்கிய வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலிருந்து அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்த ஒரு தொகுதியினரின் தேசிய அடையாள அட்டைகள் யாழ். செயலகத்தில் உள்ளன.

கீழ்க் குறிப்பிட்டவர்கள் அவற்றை வந்து பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

முருகேசு சாந்தா மந்துவில், துரைசிங்கம்ராஜாசுரேன் மந்துவில், நாகராசா அகிலேஸ்வரன் கரம்பகம், மோசஸ் லேஜினா நாவற்குழிகுடியேற்றத்திட்டம், பரமுகமல நாதன் சரசாலை தெற்கு, பாலசிங்கம் ஞானேஸ்வரி சரசாலை தெற்கு, மகாராசா நல்லம்மா நுணாவில்மேற்கு, ஜெயராஜசிங்கம் ரமேஸ் குமார், மீசாலை, மயில்வாகனம் தயாளினி நுணாவில் மத்தி, சுப்பிரமணியம்சுதேஸ் உசன், செல்வராசா சாம்பவி இடைக்குறிச்சி, வீட்டுத்திட்டம், பொன்னையா புவனேஸ்வரன் மறவன்புலோ, இரத்தினம் விக்கினேஸ்வரராசா, மறவன்புலோ, நாகலிங்கம் அமிர்தலிங்கம் சாவகச்சேரி வடக்கு,சிவனடியான் கபிலன் மீசாலை வடக்கு கந்தையா விஜயானந்தன் மீசாலை, பஞ்சலிங்கம் நிரஞ்சினி தனம்கிளப்பு வீதி, பத்மநாதன் நிஷாந்தன் நுணாவில் மேற்கு, இராசையா இராசலட்சுமி நுணாவில் மேற்கு, ரெங்கசாமி கண்ணதாசன் நுணாவில் மத்தி

கங்கேஸ்வரி கனகசிங்கம் பேரம்பலம் வீதி, குமாரசாமி தர்மசிங்கம் மறவன் புலோ, கந்தசாமி இதயராணி மறவன்புலோ, சின்னத்துரை கல்பனா நுணாவில் மேற்கு, சிவசுப்பிரமணியம் கேதீஸ்வரன் மீசாலை தம்பு குணரத்தினம் மீசாலை தங்கராசா கலாமோகன் வரணி வடக்கு, குணரத்தினம் கோகுலராசா மறவன் புலோ, துரைராசா கஜியந்தி நுணாவில் மேற்கு, செல்லப்பா நேசரெத்தினம் சரசுாலை தெற்கு, தங்கத்துரை பகீரதன் மீசாலை வடக்கு, பொன்னையா இரத்தினசிங்கம் வரணி வடக்கு, பிரான்சிஸ் சேவியர் கெங்காதரன் மீசாலை வடக்கு, சண்முகராசா சண்முகதாசன் மட்டுவில் வடக்கு, கோபால பிள்ளை நாகேஸ்வரி மட்டுவில் தெற்கு, துரைராசா இராசகுமார் கைதடி நுணாவில், தியாகராசா தினேஸ் மட்டுவில் தெற்கு, ஜெயசீலன் றஞ்சனா மட்டுவில் தெற்கு, கனகசபை மயூறன் மட்டுவில், நடராசா நிவேதன் மீசாலை, தெய்வேந்திரம் சுதர்சன் மீசாலை செல்லன் செல்வராசா கைதடி வடக்கு, பரமநாதன் சகிரேன் கைதடி கிழக்கு, சிவராசா சிவறோசினி இடைக்குறிச்சி, மகிந்தராசப நவமேனன் நுணாவில் மேற்கு துரைராசா றொபீனா நுணாவில் மேற்கு, கிருஸ்ணமூர்த்தி ரமேஸ் சாவகச்சேரி வடக்கு சந்தசாமி நாகசுதர்சன் எழுதுமட்டுவாழ், சிவசம்பு சிவகுமார் சாவகச்சேரி வடக்கு, வேலுப்பிள்ளை முருகானந்தன் வரணி, கிருபாகரன் லீலா மட்டுவில், தெற்கு.(க)

### காணி கொள்வனவு

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசபையின்தலைமைஅலுவலக கட்டடம் அமைப்பதற்கென கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிராதன வீதியில் காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இக் காணி கொள்வனவு செய்வதற்கான 7லட்சம் ரூபா ஈ.பி.டி.பியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளரும் கரவெட்டி பிரதேசபைத் தலைவருமான வல்லிபுரம் நடராசாவால் ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-41)

## இராசி பலன்

30.11.2000
கார்த்திகை 15 வியாழன்
சதுர்த்தி மு.ப. 11.23 வரை
உத்தராடம்பி இ.2 50வரை
ராகு காலம் 1.44 -3.14
சுப நேரம் 7 44- 9.14
சித்தம்

**மேடம்**
முயற்சிகள் கை கூடும், தொழில் மேன்மை, அதிகாரம், வியாதி.

**இடபம்**
பிரயாணம், மனக்கிலேசம், வயிற்றுக்கோளாறு, கட்டுப்படுதல்

**மிதுனம்**
எதிர்பாராத பிரச்சினை, வியாதி உண்டாதல், பிரயாண பயம், முயற்சி தாமதம்.

**கடகம்**
களஸ்திர சுகம்,பணவரவு, விருந்துபசாரம், ரேகம்.

**சிங்கம்**
நோய் குணமடைதல், பகைவர் விலகுவர், மகிழ்ச்சியான சம்பவம். புதிய முயற்சி,

**கன்னி**
நிலைக்கேடு, தொழில் நன்மை, குடும்பக் கவலை, வியாதி.

**துலாம்**
மனப்பதற்றம், உறவினர் வெறுப்பு பணச்செலவு, காரியம் தாமதம்.

**விருச்சிகம்**
சகோதரர் உதவி, இனிய நிகழ்வு,தலை வலி குடும்ப சுகம்.

**தனுசு**
வாக்குக் கலகம், மதிப்புக் குறைவு, பணவிரயம். காரிய தாமதம்.

**மகரம்**
உடல் நலம், நல்ல உணவு கிடைத்தல், காரிய நன்மை, தெய்வசிந்தை.

**கும்பம்**
பிரயாண அலைச்சல், கோபப்படுதல்,சுப செலவு, முயற்சி பலிதம்.

**மீனம்**
மன மகிழ்ச்சி, தனவரவு, சினேகிதர் உறவு, நிலை மாற்றம்.

வளவன்

## இலங். மரணதண்டனைச்சட்டம் நிறைவேற்றுவதில் சிக்கல் நிலை

### அலுகோசு இல்லையாம்

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் மரண தண்டனை நிறைவேற்றும் சட்டம் கொண்டு வரப்பட்டதையடுத்து, மரண தண்டனை நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்களில் சிறைச்சாலைத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட 56 கைதிகள் தொடர்பான ஆவணங்களை நீதி அமைச்சர் பட்டிவீரக்கோனின் இறுதி முடிவிற்காய் அனுப்பி வைத்திருப்பதாகவும் சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆயினும், மரண தண்டனை நிறைவேற்றும் நடைமுறை நீண்ட காலமாய் இங்கு இல்லாது இருந்த காரணத்தினால், மரண தண்டனை நிறைவேற்றும் ஊழியர் (அலுகோசு) தற்போது சேவையில் இல்லாமல் இருப்பதாகவும், அதற்கான ஆட்கள் நியமிக்க வேண்டியது அவசியம் எனவும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், மரண தண்டனை நிறைவேற்றும் போது கைதிகள் அணியவேண்டிய ஆடைகளும் புதிதாக தைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மரணதண்டனை நிறைவேற்றுவது தொடர்பாக மனித உரிமை அமைப்புகளின் அபிப்பிராயங்கள் இன்னமும் எதிர்பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது: (உ)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 07 — 06 — 1960



மறைவு: 31 — 10 — 2000

### திரு. தி. இராசேந்திரம்

(எஸ்.எஸ்.ஆர்)

அன்போடும் பாசத்தோடும் எங்களுக்கு நிழலாய் நின்று
எங்கள் எதிர்காலததுக்காக அயராது உழைத்த.
அன்புச் சகோதரனே நீர் எம்மை விட்டுச்
சென்றாலும் உம் நினைவு எம்மை விட்டு விலகாது
மாதங்கள் ஒன்றாகினாலும் ஓராயிரமாம்
ஆண்டாகினாலும்
பாசம் என்னும் வலையில் சிக்கித் தவிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் உளளூர், வெளிநாடுகளிலிருந்து அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் இன்னும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவிகள் நல்கியவர்களுக்கும் 30-11-2000 வியாழக்கிழமை நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து கொள்பவர்களுக்கும் மற்றும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது பணிவான நன்றியை நவில்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
அன்புச் சகோதரி தங்கவேல், நிர்மலா,
மருமகன்- கேதீஸ்வரன்,
மருமகள்- பிரியா, தனுஷா

தகவல்
83/8 ஸ்ரான்லிவீதி
யாழ்ப்பாணம்

(இ-1053)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## விஞ்ஞானம் பகுதி - 1

நேரம் : 1 மணி

தொகுப்பு: திரு. *K.* பாலமுருகன் (ஆசிரியர்)

(நேற்றைய தொடர்ச்சி)

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

21) ஒரு வித்திலை தாவரத்தில் ஒட்டுதலை மேற்கொள்ள முடியாமையிற்கு காரணம் அங்கு காணப்படாதது
1) காழ் 2) உரியம் 3) மாறிழையம் 4) மைய்யவிழையம்

22) குறைக் கடத்தி மூவாயி எனப்படுவது எது.
1) P வகை குறைக்கடத்தி 2) n வகை குறைக்கடத்தி
3) P-n சந்தி 4) P-n-P திரான்சிஸ்ரர்

23) பெண்ணில் கருக்கட்டல் நிகழும் பகுதி யாது.
1) கருப்பை 2) பலோப்பியன் குழாய் 3) யோனி 4) கருப்பைக்கழுத்து

24) HIV தொற்று ஏற்பட்டுள்ள ஒருவர் பற்றிய உண்மையான கூற்று.
1) நிட்சயமாக அவர் எய்ட்ஸ் நோயாளி
2) மருந்து கொடுத்து அவரை சுகமாக்கலாம்
3) அவர் ஒரு தன்னினப் புணர்ச்சியாளர் ஆவர்
4) அவர் உண்ணும் உணவை உண்டால் நோய் பீடிக்கும்

25) கிளமிட மோனசு எனும் தாவரம் இருண்ட இடங்களிலிருந்து விலகி ஒளியுள்ள இடங்களை நோக்கி அசைந்து செல்வதுண்டு இந்த அசைவு.
1) இரசனை அசைவு 2) முன்னிலை அசைவு
3) திருப்ப அசைவு 4) வீக்க அசைவு

26) மனித குருதி சுற்றோட்டத்தில் எந்த நாளத்தில் ஒட்சிசனேற்றப்பட்ட குருதி அடங்கியுள்ளது?
1) சுவாசப்பை நாளம் 2) முற்பெரு நாளம்
3) பிற்பெரு நாளம் 4) ஈரல் வாயி நாளம்

27) பின்வரும் எந்த மூலகத்திற்கு சல்பூரிக் அமிலத்தை சேர்க்கும்போது ஐதரசன் வாயு வெளிவரும்.
1) காபன் 2) கந்தகம் 3) மகனீசியம் 4) அயடீன்

28) யாதேனும் மூலகத்தின் சமதானிகளுக் கிடையே மாறுபடக்கூடிய அணுவின்துணிக்கை.
1) அணு எண் 2) புரோத்தன் 3) இலத்திரன் 4) நியூத்திறன்

29) எவ் ஊடகத்தில் ஒலி கூடிய வேகத்துடன் பயணம் செய்யும்
1) வளி 2) திண்மம் 3) திரவம் 4) வெற்றிடத்தில்

30) P-n சந்தியில் வறிதாக்கற் பிரதேசத்தில் அதன் அளவு
1) $10^{-10}$ mm 2) $10^{-8}$ mm 3) $10^{-3}$ mm 4) $10^{-5}$ mm

31) உடலில் காணப்படும் மிகவும் பெரிய சுரப்பி யாது.
1) ஈரல் சுரப்பி 2) உமிழ்நீர் சுரப்பி
3) வியர்வைச் சுரப்பி 4) சதையச் சுரப்பி

32) ஓடும் நீரில் காணப்படும் சக்தி யாது.
1) அழுத்த சக்தி 2) இயக்கசக்தி 3) மின்சக்தி 4) வெப்பசக்தி

33) ஓர் பொருளின் அடர்த்தி 800 $kgm^{-3}$ பொருளின் சார் அடர்த்தி யாது.
1) $800+1000\ kgm^{-3}$ 2) $800/1000\ kgm^{-3}$
3) $800 \times 1000\ kgm^{-3}$ 4) $800-1000\ kgm^{-3}$

34) தன் மகரந்த செயற்கையை தடுப்பதற்குரிய ஆணகமுன்முதிர்விற்கு உதாரணமான தாவரம்.
1) செவ்வரத்தை 2) மூக்குத்திப் பூண்டு 3) பூவரசு 4) பப்பாசி

35) மெழுகுதிரிச் சுவாலையில் வெப்பம் கூடிய பகுதி.
1) நீலநிற வலையம் 2) கருநிற வலையம்
3) மஞ்சள் நிற வலையம் 4) மட்டாகத் தோன்றும் வெளிப்புற வலையம்

# க. பொ. த. [உயர்தரம்] பரீட்சை முடிவுகள்

### யா/ இணுவில் மத்தியகல்லூரி

**கலை**
எஸ். சபாகரன் 4பி
எஸ். அற்புதராஜ் 4பி
பி. றோஜினி பி, 3சி
ஆர். விஜிதா 3பி, எஸ்
வி. விஜிதா எ, 2பி, சி
எம். மதனராஜி 3பி, எஸ்
ரி. தெய்வதாரணி பி, சி, 2எஸ்
எம். பாமினி பி, 2சி
கே. பவானந்தி 3சி
எ. ரம்யா 3சி
எஸ். தமிழரசி பி, 2சி

**வர்த்தகம்**
ஜி. ஞானசொரூபன் 4சி
பி. ஐங்கரன் 2பி, சி
பி. அரவிந்தன் 2பி. சி

### யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி

**கலை**
ஆர். றொட்றிக்கஸ் ஏ, 2பி

**வர்த்தகம்**
ரி. மணிவண்ணன் ஏ, 2பி

**கணிதம்**
எம். டி. வசிகரன் ஏ, பி, சி

### யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தி.

**கலை**
எஸ். இளங்குமரன் 2ஏ, பி
எம். மலர்விழி 2ஏ, பி
என். விதுஷன் ஏ, பி, சி

### யா/ இளவாலை கன்னியர் மடம் மகாவித்யாலயம்

**கலை**
பி. தர்ஷினி 3பி

### யா/ யூனியன் கல்லூரி தெல்லிப்பழை

**வணிகத்துறை**
ந. பிரணவ சொரூபி 2ஏ, பி
செ. திருக்குமார் 2ஏ, பி
சி. சிவகௌரி ஏ, 2பி
சு. யமுனா ஏ, பி, சி
செ. விஜித்தா ஏ, 2சி
செ. தீபன் 3ஏ, சி
ச. நிஷாந்தினி 3ஏ, சி
கு. பகீரதி 2ஏ, பி, சி
ப. வாமதேவன் 2ஏ, பி, சி
ச. கலையரசி ஏ, பி, 2சி
ச. நிஷாந்த் ஏ, பி 2சி
இ. கஜமுகன் ஏ, பி. 2சி
சீ. ஸ்ரீபிரகாஷ் ஏ, பி, சி, எஸ்
மா. சசிரூபன் 3பி ,சி
ந. செந்தூரன் 3பி, சி
கு. ரவிக்குமார் 2பி, 2சி

**கலைத்துறை**
ப. நிஷாந்தராகினி 2ஏ, பி
வ. உமா 2ஏ, பி
கு. மங்களேசன் 2ஏ, சி
சி. எழிலரசி ஏ, 2பி
சு, ஜெயரஞ்சன் ஏ, 2பி
சு. சுபதர்சினி ஏ, பி, சி
ச. தாரணி ஏ, பி, சி
ந. வேணுகா ஏ, பி, சி
சி. ரஜனி ஏ, 2சி
இ. தனுஷா ஏ, 2சி
வ. உமாசுதசர்மா ஏ, சி எஸ்
யோ. வேணுகோபன் ஏ, 2பி, சி
ச. முகுந்தன் ஏ, பி 2சி
இ. பிரதீபா ஏ, பி, 2சி
க. ராதிகா ஏ, பி, 2சி
கு. ஜெகன் ஏ, 2பி, எஸ்
கு.சபேசினி 3பி, சி

**கணிதத்துறை**
ஆ. சாய்ராம ஏ, 2சி
பூ. அனுஷா பி, 2சி
கா. பார்த்தீபன் ஏ, 2எஸ்
ம. துஷ்யந்த் 3சி
மு. கோணேஸ்வரா பி, 2சி, ஏஸ்
சி. றஜீபன் 4சி
தி. சர்மளா பி, 2சி, எஸ்
ஏ சுதர்ஸ் 4சி

**உயிரியல்துறை**
ம. கல்பனா பி, 2எஸ்
இ. கல்யாணி 2பி, சி, எஸ்
ந. சுதர்சன் 4சி
செ. செல்வரஜனி 3சி, எஸ்

### கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

**கணிதப்பிரிவு**
கு. றோய் நிக்ஷன் 3ஏ
செ. சத்தியபாமா 2ஏ, பி, சி
சி. ஜெயானந்கம் பி, சி, எஸ்

**விஞ்ஞானப்பிரிவு**
அ. அனுராதா 3ஏ
பா. மனோஜா ஏ, 2சி

**வர்த்தகப்பிரிவு**
ப. வாசுதேவன் 3ஏ
இ. பத்மலோஜினி ஏ, பி, சி

**கலைப்பிரிவு**
த. பார்த்தீபன் 3ஏ, சி
கா. கார்த்திகா 2ஏ, பி, சி
செ. கோகிலா ஏ, 2பி,
நி. காயத்திரி ஏ, 2பி,
ச. நிஷாந்தினி ஏ, 2பி,
க. பார்த்தீபன் 2ஏ, பி, சி
யோ. செல்வலக்ஸ்சுமி ஏ, 2பி,
இ. நீவிதா ஏ, பி, 2சி

### கரவெட்டி ஞானசாரியர் கல்லூரி

**வர்த்தகப்பிரிவு**
ஜெ. ஜெயராசா 2ஏ, பி ,சி
ச. தர்சிகா ஏ, 2பி
கி. பரிமேளா ஏ, 2பி

### நெல்லியடி மத்திய ம. வி.

**கணிதம்**
த. நிரசனா ஏ, பி, சி

**விஞ்ஞானப்பிரிவு**
இ. சந்திரிக்கா 3பி, சி

**வர்த்தகப்பிரிவு**
க. பார்த்தீபன் 2ஏ, பி, சி

**கலைப்பிரிவு**
பா. பாலநளினி ஏ, பி, சி

# பிரிவுத்துயர் பகிர்வு

சுப்பையா நல்லையா

35) மெழுகுதிரிச் சுவாலையில் வெப்பம் கூடிய பகுதி.
1) நீலநிற வலையம் 2) கருநிற வலையம்
3) மஞ்சள் நிற வலையம் 4) மட்டாகத் தோன்றும் வெளிப்புற வலையம்

36) அனோபிலிஸ் நுளம்பு ஏற்படுத்தும் நோய்
1) மலேரியா 2) யானைக்கால் நோய் 3) டெங்கு 4) மூளை மலேரியா

37) வளிமண்டல காபனீரொட்சைட் அதிகரிப்பினும் 0.03% விட அதிகரிக்காததிற்கு காரணம் அது பயன்படுவது.
1) சுவாசம் 2) ஒளித்தொகுப்பு 3) ஆவியுயிர்ப்பு 4) உக்குதல்

38) 256 HZ அதிர் வெண் உடைய இசைக்கவர் வளியில் அதிரச் செய்யப்படின் அலை நீளம் யாது (வளியில் ஒலியின் வேகம் 330m/s)
1) 330x256m 2) 256/330m 3) 330/256m 4) 330/2x256m

39) மனித உடலில் மீள புதுப்பிக்க முடியாத கலம் யாது.
1) நரம்புக்கலம் 2) விந்துக்கலம் 3) தசைக்கலம் 4) குருதிக் கலம்

40) கலத்தினை முதன் முதலில் கண்டறிந்தவர்.
1) சிங்கர், நிக்கல்சன் 2) றொபேட் குக்
3) சாள்ஸ்டார்வின் 4) றோபேட்சன்

# புதிய கற்கை நெறிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரியில் அடுத்த ஆண்டில் இருபுதிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான அனுமதிகளை தொழிற் பயிற்சித்திணைக்களம் வழங்கியுள்ளதாக கல்லூரி அதிபர் எம்.குணரத்தினம் தெரிவித்துள்ளார்.

மோட்டார் வாகனத் தொழிநுட்பவியல், தேசிய தராதரப் பத்திர கணிய அளவைப் பயிற்சி ஆகிய கற்கை நெறிகளே புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறிகளை உரிய காலத்தில் ஆரம்பிப்பதற்கு போதிய கருவிகள் மற்றும் பயிற்சி நெறிக்கான இயந்திர உபகரணங்கள் வழங்கப்படாமையினாலேயே இக்கற்கை நெறிகளின் ஆரம்பத்தில் பின்னடைவு ஏற்பட்டதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ச-60)

# அதிபர் வேண்டுகோள்

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அடுத்த ஆண்டு 5ஆம் தரத்தில் அனுமதி பெற விரும்பும் மாணவர்களுக்கான விண்ணப்பத்தை டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அதிபர் எம். ஸ்ரீபதி அறிவித்துள்ளார்.

(ச-52)

# பிரிவுத்துயர் பகிர்வு

## சுப்பையா நல்லையா

(தபால் விநிதர் சேவையில் உயர்பதவி, தபால்தந்தி திணைக்களம், கொழும்பு)

தம்பாலை, அச்சுவேலியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பையா நல்லையா 27.11.2000 அன்று காலமானார்.

தகனக்கிரியைகள் நாளை நீர்வேலியில் நடைபெறும்.

தகவல்: கிருபா (மகன்)

## செல்லத்துரை ஞானகுருபரன்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை ஞானகுருபரன் 27 ஆம் திகதி சுவிஸில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

தகவல்: சகோதரர்கள்.

## திருமதி இ கே. சுப்பிரமணியம் லீலாவதி

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் லீலாவதி 26.11.2000 அன்று லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்: சி. பரமேஸ்வரி

## ஐயம்பிள்ளை கணேசன்

(பங்காளர் உமா றேடிங் சென்றர்)

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐயம்பிள்ளை கணேசன் 27.11.2000 அன்று கொழும்பில் காலமானார்.

இறுதிக்கிரியைகள் நேற்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

தகவல்: மனைவி

## இன்று ஒரு தகவல்

# பாவப்பட்டோருக்கும் மீட்பு உண்டாம்

ஒரு தகப்பனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர் பெரிய செல்வந்தக் குடும்பம். பயபக்தியான குடும்பம். இதிலே இளையவனுக்கு கொஞ்சம் வெளியுலக வாழ்க்கை வாழ வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டுவிட்டது உடனே தகப்பனிடம் ஆஸ்தியில் தன் பங்கை தரவேண்டுமென்று கேட்டான். தகப்பன் மகனே உன்பங்கு எப்பொழுதும் உனக்குத்தானே. இப்போ அது எதற்கு என்றார். மகனோ என்பங்கை எனக்குத் தாரும் நான் தூரதேசத்துக்கு போய் வியாபாரம் செய்யப் போகிறேன் என்றார். தகப்பன் 'மகனே, இங்கே உனக்கென்ன குறை நீஏன் கஷ்டப்படவேண்டும்' என்றான். மகன் அந்தக் கதை எல்லாம் வேண்டாம், எனக்கு என் பங்கு தான்வேண்டுமென்றான். தகப்பனும்வேறு வழியில்லாதுஅவனுடைய பங்கை கொடுத்தார். அவன் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு தூரதேசத்துக்கு புறப்பட்டுப் போனான்.

இவனையும் இவன் சொத்தையும் கண்டவர்கள் பலர் இவனுக்கு நண்பராயினர். சொல்லவும் வேண்டுமா? தகப்பன்வீட்டில் கிடைக்காத சந்தோசங்கள் பல பல குடிப்பதற்கு பாட்டில்கள் பல வர்ணம், குளிப்பதற்கு பன்னீர்த் தொட்டிகள்சில, குலவுவதற்கு குமரிகள் பலர் இன்ப வெள்ளத்தில் மிதந்தான். சொந்த பந்தமெல்லாம் மறந்தான். நாட்கள் கடந்தன நாணயங்கள் மறைந்தன. நண்பர்கள் பறந்தனர். நாதியற்ற நாயகன் நடுத்தெருவில்.

உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, உறங்க உறைவிடமில்லை, அந்த வேளையில்தானே, அத்தேசத்தில் பஞ்சமும் வந்தது யாரிடமும் இரக்கவும் வழியில்லை ஒரு விவசாயியிடம் போய்ஒட்டிக்கொண்டான். அவனிடம் தன் பன்றியைமேய்க்க சொல்லித் தவிட்டை உண்ணக் கொடுத்தான். அதுவும் வயிறு நிறையக்கிடைக்கவில்லை. பன்றி உண்ணும் தவிட்டுக்கு கூட பஞ்சம். இப்போதுதான் ஞானம் பிறந்தது தம்பிக்கு. அப்பன் வீட்டில் தெப்பமான சாப்பாடு வேலைகாரனுக்கே வேண்டிய மட்டும் உணவுண்டே. நான் ஒன்று செய்வேன் என் தகப்பனிடம் செல்வேன். பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவம் செய்தேன். உமது மகன் என்று சொல்லக் கூட அருகதையற்றவன். உமது வேலைக்காரனில் ஒருவனாக ஏற்றுக் கொள்ளுமென்றும் கேட்பேன் என்று நினைத்தவன் எழுந்து நடந்தான். அங்கே தகப்பனோ மகன் நினைவாக வழிமேல் விழி வைத்துப் பார்த்த வண்ணமாக இருந்தார். தூரத்தில் ஒரு உருவம் தெரிகிறது. மகன் போல இருக்கிறது என்று நினைத்த தகப்பன் எழுந்து கிட்டப் போனார். மகனே தான் என் மகனே இது என்ன கோலம் என்று கிட்டப்போய் கட்டி முத்தமிட்டு அழைத்தார். அப்பா நான்பாவி உமது பிள்ளை என்று சொல்லக் கூட அருகதையில்லை என்னை உமது வேலைக்காரனில் ஒருவனாக ஏற்றுக் கொள்ளும்படிவேண்டினான் தகப்பனோ வேலைக்காரரை கூப்பிட்டு ஸ்நானம்செய்யவும் விருந்துபண்ணவும் கட்டளையிட்டார். அங்கே பெரும் விருந்து நடந்கதுமனிதனான ஒருவன் தன்பிள்ளை மனம் திரும்பி வரும்போது அவனை அணைத்துக் கொண்டால், எல்லா மக்களுக்கும் தகப்பனாகிய கடவுள் பாவ வழிகளை விட்டு மனம் திரும்பும் மனிதனை ஏற்றுக் கொள்வது அதிக நிச்சயமல்லவா.

தொகுப்பு

மு. கிருஸ்ணன்

# ஆசிரியபயிற்சிக் கலாசாலை பரீட்சைகள் மார்ச்வரை ஒத்திவைப்பு

(மந்துவில்)

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளுக்கு 2000ம் ஆண்டில் உள்வாங்கப்பட்ட ஆசிரிய மாணவர்களுக்கான முதலாம் வருடப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கிடைத்த சுற்றுநிருபத்திற்கமைய மேற்படி பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் பெரும்பாலும் அடுத்த வருடம் மார்ச் மாத இறுதிப் பகுதியில் நடைபெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய மாணவரை மேற்படி கலாசாலைகள் உள்வாங்குவதில் ஏற்பட்ட கால தாமதத்தில் உரிய பாடத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாமையே பரீட்சை ஒத்திவைக்கப்படுவதற்கு காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-39)

# மூடப்பட்ட நிலையில் கூட்டுறவுக் களஞ்சியம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் மொத்த விற்பனைக் களஞ்சியத்தில் பணிபுரியும் முகாமையாளர் கடந்த ஒரு மாதகாலத்துக்கு மேலாக கடமைக்குச் சமுகம் தராமையால் களஞ்சியம் மூடப்பட்டுள்ளது.

இதனால் இங்கு பணிபுரியும் நாளாந்த சம்பளம் பெறும் ஊழியர்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொள்வதாக மட்டக்களப்பு அரச அதிபரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இந் நிறுவனத்தில் முகாமையாளர் தவிர பணிபுரியும் அனைவரும் நாட்கூலி பெறுபவர்களாக உள்ளமையால் வேலையற்ற நிலையில் சிக்கியுள்ளவர்கள் மீண்டும் நிலையத்தைத் திறக்கும்படி வேண்டியுள்ளனர்.

(ச-60)

# போலியோதடுப்பை ஒட்டி புலிகள் - படையினர் யுத்த தவிர்ப்பு

(மட்டக்களப்பு)

குழந்தைகளுக்கான போலியோ தடுப்புச் சொட்டுமருந்து இரண்டாவது தடவையாக வழங்கப்படவுள்ளதை ஒட்டி, பாதுகாப்புப் படையினரும், விடுதலைப்புலிகளும் யுத்தத் தவிர்ப்பை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள பல்லாயிரம் சிறார்களுக்கு டிசம்பர் 1,2 ஆம் திகதிகளில் போலியோ சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளது.

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியோடு இச்சொட்டு மருந்து வழங்கப்படுகின்றது. அத்துடன் இந்நிறுவனமே யுத்த நிறுத்தத்துக்கும் ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-60)

# தமிழ் மொழியை புறக்கணிப்பதில் கல்விமான்களும் முனைப்பார்

### யாழ். பல்கலை வரலாற்றுப் பேராசிரியர் தெரிவிப்பு

(அரியாலை)

மிக உயர்ந்த கல்விப்பீடங்களை அலங்கரிக்கின்ற கல்விமான்கள் கூட ஆங்கிலத்தை முன்னெடுத்து தமிழை பின்தள்ளுகின்ற நிலை இங்கே காணப்படுகிறது.

இந்நிலை எமது தாய் மொழியின் தனித்துவத்தை, பண்பாட்டினை நாமே குழி தோண்டிப் புதைப்பதற்கு ஒப்பானதாகும்.

யா/இராமநாதன் கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் ச. சத்தியசீலன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

எந்தவொரு இனமாயினும் அந்த இனத்தின் அடையாளங்கள் அவர்களின் தாய் மொழிதான். இந்த தாய்மொழிக்கு உரிய இடம் கொடுக்கத்தவறுகின்ற இனம் அடையாளமற்று அழிந்து போகும்.

இன்று எங்களிடையே எமது மொழிக்குரிய முக்கியத்துவம் குறைவடைந்து, அந்நிய மொழி ஆதிக்கம் மேலோங்கி வருவது மேற்சொன்ன அழிவுக்கு இட்டுச் செல்லலாம்.

சேர். பொன் இராமநாதன் மேலைத்தேய கலாசாரங்களை விளங்கிக்கொண்டவராக இருந்த போதிலும், தமிழுக்கு உரிய மதிப்பும், இடமும் அளிக்கத்தவறவில்லை என்று குறிப்பிட்டார். (உ-106)

# கருத்தரங்கு

(சுன்னாகம்)

இடம்பெயர்ந்து, வீட்டுத் தோட்டம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, நாளை வெள்ளிக்கிழமை சுன்னாகம் மத்தி கிராமசேவையாளர் காரியாலயத்தில் மு.ப 9 மணியளவில்இடம்பெறவுள்ளது. (உ)

# பொலிஸார் காயம்

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதியில்நிலக்கண்ணிவெடிவெடித்ததில் பொலிஸார் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீதிரோந்துக் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை நேற்றுக்காலை இச் சம்பவம் நடைபெற்றது.

காயமடைந்த பொலிஸார் வவுனியா ஆஸ்பத்திரியிலிருந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

இதேவேளை வவுனியா இறம்பைக் குளத்தில் பெருந்தொகையான மருந்துப் பொருட்களை பொலிஸார் கைப்பற்றினர். (வ)

# சட்ட விரோத மின்பாவனை

(சுன்னாகம்)

சுன்னாகம் தெற்குப் பகுதியில் சட்ட விரோத மின் பாவனை அதிகரித்துள்ளது.

இது குறித்து பொதுமக்களால் சுன்னாகம் மின்சார சபை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ)

# சிறுவன் மரணம்

(கொழும்பு)

கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன், சகபாடியுடன் மோதுண்டு மரணமானான்.

கொலுவெவ மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 9வயதுச் சிறுவன் ஒருவனே இவ்வாறு மரணமானதாக தெரியவந்துள்ளது. (உ)

# களஞ்சியக் காப்பாளர் சங்கம் அமைப்பு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்திலுள்ள களஞ்சியக் காப்பாளர்கள் தமது பிரச்சினைகளுக்கு ஒன்றுபட்டுத் தீர்வு காண்பதற்காக களஞ்சியக்காப்பாளர் சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இவ்வாறு தாம் சங்கம் அமைத்து செயற்படுவதன் மூலம் தமக்குள்ள பிரச்சினைகளை ஒன்றுபட்ட குரலில் தெரிவிப்பதுடன் தமது உரிமைகளையும் உரியமுறையில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கின்றனர்

அண்மையில் இடம் பெற்ற யாழ். செயலக களஞ்சியத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக அதன் களஞ்சியக் காப்பாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-59)

# யாழ் நகரில் துர்நாற்றம்

(நல்லூர்)

யாழ் நகரின் பிரதான வீதிகளு ஒன்றான ஆஸ்பத்திரி வீதியின் தென்புறமாகவுள்ள வாய்க்காலில் தண்ணீர் ஓடாதவகையில் தேங்கி நிற்பதாகவும், அழுக்கான நீர் தேங்கி நிற்கும் காரணத்தால் துர்நாற்றம் வீசுவதாகவும் நுளம்புத்தொல்லை அதிகரித்துள்ளதாகவும் அவ்வீதியில் உள்ள வியாபார நிலையங்களின் உரிமையாளர்களும், தொழிலாளர்களும், பொது மக்களும் புசார் தெரிவித்துள்ளனர். (க-103)

# 39 வது ஆண்டு விழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமயப் பாடசாலையின் 39-வது ஆண்டு விழா விபுலானந்த மணிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பிரதித் தலைவர் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரா நந்தஜி மகாராஜ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழ்நாடு கன்னியாக்குமாரி விவேகானந்தா கேந்திர முதல்வர் ஸ்ரீமத் ந. கிருஷ்ண மூர்த்தி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

விழாவில் வரவேற்புரையை மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தஜி மகராஜ் நிகழ்த்தினார்.

கல்லடி தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை, சாரதா மகளிர் இல்லம், குருகுல மாணவர்கள் மற்றும் ஞாயிறு பாடசாலை மாணவர்களது கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-60)

# தலைவர் பிரபாவின் மாவீரர் தின உரையில் முரண்பாடு தெளிவான விளக்கம் தேவை

### பிரிட். வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர்தின உரையில், சில முரண்பாடுகள் காணப்படுவதாகவும் அது குறித்த விளக்கத்தினை தமக்குத் தருமாறும் பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஒருவர் லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தெளிவற்று இருப்பதாகவும் அது குறித்து தமக்கு உடன் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் புலிகளின் பிரதிநிதிகளிடம் கோரியிருப்பதாக லண்டனில் இருந்து வெளியாகும் செய்திகள் தெரிவித்துள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக, நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயாரென முன்னர் நோர்வே பிரதிநிதி மூலம் கூறப்பட்ட போதிலும், பின் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் நிபந்தனைகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். என செவ்வி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

பிரபாகரன் தற்போது மாவீரர்தின உரையில் நிபந்தனையற்ற பேச்சுக்குத்தயார் என கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் இந் நிலைப்பாடு தமக்கு விளங்கிக்கொள்ள முடியாது இருப்பதாகவும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம், பிரபாகரனின் மாவீரர்தின உரையில் 20 முரண்பாடுகள் காணப்படுவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ)

# கனடா பொதுத் தேர்தலில்
# லிபரல் கட்சி அமோக வெற்றி

[ஒட்டாவா]

கனடிய நாடாளுமன்றத் தேர்தலில் லிபரல் கட்சி மூன்றாவது முறையாக அமோக வெற்றி அடைந்திருக்கிறது.

முப்பத்தேழாவது பாராளுமன்றத் தேர்தல் நேற்று முன தினம் கனடாவில் நடைபெற்றது.

முன்னூற்றியொரு இடங்களுக்கான இத்தேர்தலில் நூற்றிஎழுபத்துமூன்று இடங்கள ஆளும் லிபரல் கட்சிக்கு கிடைத்திருக்கிறது.

கனடாவில் தமிழர் கூடுதலாக வாழும் மாவட்டங்களில் லிபரல் கட்சிக்குபெரும்பான்மை வாக்குகள் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

அண்மையில் புலம்பெயர்ந்து கனடாவில்வாழும் தமிழர்கள வைத்த இரவு விருந்தில் லிபரல்கட்சி அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டதாகவும் அதன் மூலம் எதிர்க்கட்சியினர் லிபரலுக்கு எதிராகத் தமிழர்களை சுட்டிக் காட்டி தேர்தல் பிரசாரம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (து)

### தமிழர் தேசிய
# இயக்கத்தலைவர் முகதாவில் 'பிரபா'வின் பிறந்த தினம்

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் 46 வது பிறந்தநாள் விழா, கடந்த திங்கள் இரவு சென்னையில் ஆவடி எனுமிடத்தில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தலைமையில் நடைபெற்றது.

மிகவும் எழுச்சி பூர்வமாக இடம்பெற்ற இவ்விழாவில், பெரியார் திராவிடக்கழக தலைவர் ஆரூர் ஜெகதீசன், தமிழர் இயக்கத்தைச்சேர்ந்த தியாகு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் தமிழ்த்தென்றல் என்ற இளைஞர் தலைவர் பிரபா போன்று உடையணிந்து அவரது செயற்பாடுகளை செய்து காட்டினார்.

கூடிநின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள், எழுந்து நின்று கரகோஷத்தின் மத்தியில் இக்காட்சியை கண்டு களித்தனர்.

மேற்படி விழாவில் பெரியார் திராவிடக்கழக தலைவர் ஆரூர் ஜெகதீசன் உரை நிகழ்த்துகையில்,

தலைவர் பிரபாவின் பிறந்த தினமான இதே நாளிலேயே, சாதீயத்தை பாதுகாக்கும் இந்திய அரசின் அரசியல் சாசனத்தைஎரித்து அதற்காக பெரியார் சிறை சென்றதாகவும் இந்நாள் ஒரு பொன்னாள் என்றும் குறிப்பிட்டார்.

பழ. நெடுமாறன் தலைமையுரையாற்றுகையில். தமிழ்நாட்டு தமிழர்கள் விடுதலைப்புலிகளுக்கும் அவர்களது கொள்கைகளுக்கும் ஏன் ஆதரவு அளிக்கக்கூடாதென வினாவெழுப்பினார். (உ)

### கன்னட நடிகர்
# ராஜ்குமாரின் விடுதலை நாடகம் விசாரணை உடன் தேவை
## செல்வி ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

சந்தனக் கடத்தல் வீரப்பன் ராஜ்குமாரை பிடித்ததும் பழ. நெடுமாறன் மூலம் விடுவிக்கப்பட்டதுமான நாடகத்தை புலனாய்வுத்துறையினர் விசாரிக்க வேண்டும் என்று செல்வி ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விசாரணையில் இந்திய மத்திய புலனாய்வுத் துறை, இந்திய உளவுத்துறை போன்றவைகள் ஈடுபட வேண்டும் என்று அண்ணா திராவிடமுன்னேற்றக்கழக பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா கோரிக்கை விடுத்தார்.

அந்தக் கோரிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்; கன்னட நடிகர் ராஜ்குமார் பத்திரிகைகளில் முறைப்படி அறிவிக்கப்பட்ட ஐந்து நாட்களுக்கு முன் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் அந்த ஐந்து நாட்களுக்குள் சந்தனக்கடத்தல் வீரப்பன் வேறு மாநிலத்துக்கோ வேறு நாட்டுக்கோ தப்பியோடிய பின்னரே ராஜ்குமார் விடுதலை பற்றி அறிவிக்கப்பட்டதென்றும் இதனை மத்திய புலனாய்வுத் துறை விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

உண்மையில் வீரப்பன் இந்தியாவில் இருக்கிறானா ? பது சந்தேகமேயென்றும் இதனை மாநில அரசுகளோ மத்திய அரசோ உறுதி செய்ய வேண்டுமென்று செல்வி ஜெயலலிதா கோரிக்கை விடுத்தார். (து)

## உலக தரிசனம்

# இஸ்ரேல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது

(ரெல்அவிவ்)

இஸ்ரேல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டதாக அந்நாட்டு வானொலி ஒன்று தெரிவித்தது.

நேற்று முன்தினம் கூடிய நாடாளுமன்றம் கலைக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு ஆதரவைப் பெரும்பான்மை இருந்ததால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. என்று பிரதமர் எஹிபராட் அறிவித்தார்.

பலஸ்தீனப் பிரச்சினையைச் சரியாக கையாளாததால் தனக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை குறைந்ததையடுத்து நாடாளுமன்றத்தைக் கலைத்தார்,

நாடாளுமன்றத்திலுள்ளஎழுபத்தொன்பதுபேரில் அறுபத்தொன்பது பேர் நாடாளுமன்றம் கலைப்பதற்குச் சாதகமாக வாக்களித்தனர்.

புதிய தேர்தலில் தான் போட்டியிடப்போவதாகவும் தேர்தலுக்குரியநாள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும்தெரிவித்தார். (து)

# சிங்கப்பூரில் தொற்று நோய்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்களில் பத்து வீதத்தினர் புதுவித தொற்றுநோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

என்றுமில்லாதவாறு அண்மைக் காலங்களில் இந்த புதுவித தொற்றுநோய்கள் பரவி வருவதாகவும் உல்லாசத் துறையினரால் இது பரவி வருவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன: (து)

### மூலிகைப் பெற்றோல்
# உற்பத்தி தொடர்பாக ஜனவரியில் விசாரணை

(சென்னை)

மூலிகை மூலம் பெற்றோல் உற்பத்தி செய்வது தொடர்பாக இராமுப்பிள்ளை மீது எதிர்வரும் ஜனவரி மாதம் விசாரணை இடம் பெறவுள்ளது.

நேற்று முன்தினம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மூலிகைப் பெற்றோல் இராமுப்பிள்ளைமீதும் அவரது நான்கு சகபாடிகள் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் முற்பகுதியிலிருந்து மூலிகை இராமுப்பிள்ளை மீதான சர்ச்சைகள் இந்தியா முழுவதும் பிரதிபலித்துவந்துள்ளமையும் பல முறைஇராமுப்பிள்ளைதனது மூலிகைப் பெற்றோலை செய்து காட்ட முனைந்ததும் அதனைத் தொடர்ந்துஇராமுப்பிள்ளையின் பெற்றோலிய இரசாயனக் கிடங்கை அரசுகைப்பற்றியதும் தெரிந்ததே

இந்த பலகோடி ரூபா மோசடி வழக்குத் தொடர்பாக அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றில் விசாரணை தொடங்க இருக்கிறது. (து)

# முக்கிய பேச்சு

(புதுடில்லி)

மசகு எண்ணெய் பேச்சில் ஈராக்கும் இந்தியாவும் நெருக்கமான உறவுக்கு வந்துள்ளன.

இந்தியா வந்திருக்கும் ஈராக் துணைத்தலைவர் மத்திய பெற்றோலிய அமைச்சர் மற்றும் வெளியுறவு அமைச்சா ஆகியோருடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

இந்தக்கலந்துரையாடலின் போது மசகு எண்ணெயின் விலையை குறைக்கும்படி இந்திய பெற்றோலிய அமைச்சர் ஈராக் துணைத் தலைவரைக் கேட்டுக் கொண்டார். (து)

### பீஹாரின்
# முன்னாள் அமைச்சர் லாலு மீண்டும் நீதிமன்றக் காவலில்

(பட்னா)

வருமானத்துக்குக் கூடுதலாகச் சொத்துச் சேர்த்தார் என்றகுற்றத்துக்காக முன்னாள் பீஹார்முதல்வர்லாலு பிரசாத்யாதவ் மீண்டும் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பீஹார் மாநில ஜனதாதள் தலைவரும் முன்னாள் முதல்வருமான லாலுபிரசாத் அளவுக்கு மீறி பல கோடி ரூபா சொத்துச் சேர்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பிணைக்காலம் முடிவுற்றதை அடுத்தே நீதிமன்றம் திரும்பவும் லாலு பிரசாத்தை நீதிமன்றக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பீஹார் மாநில முதல்வர் இவரது மனைவியென்பதும் அவருக்கும் இந்த சொத்துச் சேர்த்த விவகாரத்தில் பங்கு உண்டு என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது (து)


# கேள்வி அறிவித்தல்

**பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.**

1. வல்வெட்டித்துறை நகராட்சி மன்றக் கட்டடம் அமைத்தல்(கட்டம் 111)வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால் 2000 ஆம் ஆண்டு மார்கழி மாதம். 19 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள்திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் இக்ராட்(ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-8 இலும் அல்லது அதற்கு மேற்பட்ட பதிவுகள் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவார்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரைசெய்யப்பட்டதுமான விபரங்கள் அடங்கிய பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றும் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா 14, 300 ஐயும் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் ரூபா 500 இனையும யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள கட்டடங்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2000 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12 ஆம் திகதி பிற்பகல் 4.15 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
6. இவை தொடர்பான மேலதிக விபரங்களை நிறைவேற்று பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்: மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

எந்திரி. இ. சிறீகாந்தா.
பிரதம பொறியியலாளர்

பிரதம எந்திரி அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1069)

''இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ள துூஉம் இன்றிக் கெடும்''

- குறள் -

# வலம்புரி

## சமாதானத்தின் தடைக்கல்

இலங்கை இனப்பிரச்சினையில் இப்போதுதான் சர்வதேசத்தின் பார்வை முழுமையாகத் திரும்பியுள்ளது. நோர்வே, பிரிட்டன், இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்ற பாங்கில் தமது சமாதான முயற்சிகளை முனைப்புடன் முடுக்கி விட்டுள்ளன. இதனால் ஏதோ ஒரு முடிவு வரும் போல் தெரிகிறது என்ற வகையில் மக்கள் கூடியிருந்துகதைக்கும்அளவிற்கு எதிர்பார்ப்பு உள்ளது.

நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இருதரப்பினரும் இணக்கம் தெரிவித்தாலும், யுத்தம் தொடர்ந்து நடைபெறுமானால் ஒருவரைஒருவர் குறை கூறுவதும், குற்றஞ் சாட்டுவதும் தவிர்க்க முடியாததாகி விடும்.

இதனால் இருதரப்பினரும் தம் பக்கங்களிலுள்ள நியாயங்களை முன்வைக்க முனைவார்கள். இந்நடவடிக்கை சமாதானப் பேச்சு வார்த்தைக்கு ஆரோக்கியமானதல்ல.

அறுந்துபோனகயிற்றை முடிந்தாலும், கயிற்றில் ''முடிச்சு'' இருக்கவே செய்யும். அம் முடிச்சு எதற்கும் ஒரு தடையாக இருக்கும் என்பதனை நாம் மறந்து விடலாகாது. அதே போன்றுதான் ஒரு பக்கத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை நகரும் போது மறுபுறத்தில் யுத்தம் நடந்தால் அது சமாதானத்தின் தடைக்கல்லாகவே அமையும். அத் தடைக்கல்லை தகர்த்து விடுவதன் மூலமே சமாதானப் பேச்சுவார்த்தையின் நகர்வுக்குப் பாதையமைக்க முடியும். இது விடயத்தில் சர்வதேச சமூகத்திற்கும் பாரிய பொறுப்புண்டு.

இலங்கை அரசிற்கு நவீன்ரக ஆயுதங்களை வழங்கிக் கொண்டிருக்கும் நாடுகளின் போக்கே யுத்தத்தை அரசு தொடர்வதற்குக் காரணமாகவுள்ளது. எனவே இந் நிலையில் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கி யுத்தத்தை தூண்டும் நாடுகளின் செயற்பாட்டினைத் தடுப்பதும் சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நாடுகளின் தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

அதனைச் செய்வதன் மூலம் சமாதானத்தை சூழ்ந்துள்ள ஒரு பகுதி இருளை நீக்கி விட முடியும்.

# குடும்ப உறவுகளை களங்கப்படுத்தும் மதுமயக்கம்

# இதனை மாற்றுவது இளையோரின் கடமையே!

தனி மனிதர்கள் இணைந்தது குடும்பம். குடும்பங்கள் இணைந்தது சமுதாயம். அந்த சமுதாயசுபீட்சத்துக்கு தனிமனித ஆற்றல் இன்றியமையாதது. அந்த தனிமனிதர்களால் கட்டியெழுப்பப்படும் குடும்ப இயக்கம் சமுதாய விழுமியங்களைச் சுமந்து கொண்டு நகர வேண்டிய தேவை அவசியமானதே.

இந்தக் குடும்ப இயக்கத்தின் அச்சாணியாகிய குடும்பத் தலைவனின் செயற்பாடு வளமானதாக அமையும் போதுதான் வாழ்க்கை வண்டி வனப்புடன் பயணிக்கும் அதனால்சமுதாய இலட்சியம் உரிய இலக்கு நோக்கி நகரும்.

ஆனால் இன்றைய குடும்ப ஆணிவேரை அறுக்கும் அரிவாளாக'மது' எழுந்திருப்பது துர்அதிர்ஷ்டமானதே. இது விடயம் தொடர்பாக உரிய அறிவுறுத்தல்களும், அடக்கு முறைகளும் நடைமுறையில் போதியளவு இல்லாமையே குடும்ப இயக்கத்தின் சீரழிவிற்கும்,சமுதாய விழுமியங்களின் சிதைவிற்கும் வழிவகுத்து நிற்கின்றது.

இதைத் தடுத்து நிறுத்தி குடும்பப் பிணைப்புகளையும் சமுதாய நன்நெறிகளையும்கட்டி வளர்ப்பதற்கு இன்றைய இளையோரால் மட்டுமேமுடியும். இந்தமதுவின் மயக்கத்தினால் குடும்பஉறவுகளிடையேயும் சமுதாயப் பிணைப்புக்களிடையேயும் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கி நிற்கின்றன.

### அமைதியின்மை

குடும்பத் தலைவனோ அன்றி குடும்பஉறுப்பினர்ஒருவரோ மதுவின் பிடியுள் மண்டியிட்டுக்கிடப்பாராயின் அந்தக் குடும்பத்தின் அமைதி என்பது அடியோடு அறுக்கப்படுகின்றது.

குடித்து விட்டு வருபவர் கண்டபடி வாய்க்கு வரும் புதுப்புது வார்த்தைகளையெல்லாம் வீசித்தளுகிறார், இதனால் பிள்ளைகளின் வளர்ச்சிச் சூழல் சலனமுடையதாய் மாறிவிடுகின்றது.அவர்களுக்கு கல்வி மட்டில் உள்ள ஆர்வத்தைக் குன்றச் செய்கின்றது.வீட்டினுள்ளே கலகங்களும் வலுக்கின்றன. அக்குடும்பச் சூழல் அடிமட்டத் திற்குத் தளளப்படுகின்றது.

### புரிந்துணர்வின்மை

மது போதையிலிருப்பவர் எவரையும் எதையும் புரிந்து கொள்வதில்லை ஏன் தன்னைக்கூட அவர் மறந்தே விடுகின்றார்.இதனால் குடும்பத்தின் தேவை அவற்றின் குறைபாடுகள்,அதை நிவர்த்தி செய்யும் வழிமுறைஎது எனக் கண்டறியத் தவறுகின்றார்.

எதிலும் குடும்ப உறவுகளிடையே குற்றம் தேடும் பண்பு, எந்த முக்கிய விடயத்தையும் உதாசீனம் செய்யும் இயல்பு,எடுத்தெறிந்து பேசும் திறன் என்பவையே அவரை ஆக்கிரமித்திருக்கும்.

இதனால்கணவன்–மனைவி உறவுக்கிடையில் விரிசல் ஏற்பட்டு பிள்ளைகளுக்கும் குடும்பத்துக்குமிடையேயான கூட்டுறவு பாதிக்கப்படுகின்றது.

பிள்ளைகள் தமது தேவைகளை உரியமுறையில் நிறைவேற்றிக்கொள்ள முடியாமையினால் விரக்தி நிலைக்கு ஆளாகுகின்றார்கள். இதனால் தாமெடுக்கும் உறுதியற்ற தீர்மானங்களினால் அவர்களின்எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகிவிடும்.

**ஆ. ஜென்சன் றொனால்ட்**
(ஈச்சமோட்டை நிருபர்)

### நோய் நிலைமை

குடியில் மூழ்கிமுக்குளிக்கும் மதுப் பிரியர்களுக்கு இலகுவாகவே ஈரல்நோய் பற்றிக் கொள்கிறது. அதாவது மதுவிலுள்ள அதிகரித்த அற்ககோல் ஈரல்க்கலங்களைச் சிதைத்து அதன் தொழிற்பாட்டிற்குப் பங்கம்விளைவிக்கின்றது.

இவ் ஈரல் நோய்காரணமாக வயிற்று வீக்கம், சமிபாடின்மை, வயிற்று வலி, இருமலின் போதும் மலங்கழிக்கும் போதும் குருதி வெளியேறல், கைகால் சுண்டியிழுத்தல் போன்ற நோய் நிலைமைகள் ஏற்பட்டு மரணம் வரை இட்டுச் செல்கின்றது.

### பொருளாதாரப் பிரச்சினைகள்

மது மயக்கத்தில் இறங்குபவர் மதுவிற்காக எதையும் செய்யத் தயாராகவேயிருப்பார். இதனால்தனது உழைப்பின் பெரும்பகுதியை மதுவிற்கேதாரைவார்க்கின்றார். எனவே குடும்பத்தில் பொருளாதாரச் சிக்கல் ஏற்படுகின்றது.

குடும்பத் தலைவன் அதன் பொறுப்பிலிருந்து விலகியிருக்க குடும்பத் தலைவி அப்பொறுப்பை ஏற்க நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். அப்பொறுப்பை அவளால் ஈடுசெய்ய முடியாது போகவே கடன்சுமை குடும்பத்தை அழுத்தத்தொடங்குகின்றது.

எனவே பிள்ளைகள் சிறிய வயதினிலேயே படிப்பை விட்டு தொழில் செய்ய நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். சிறுபராயத்தில் தாம் செய்யும் தொழிலால் போதிய ஊதியம் பெறமுடியாது போகவே 'திருட்டு' செயல்களில் ஈடுபட்டு பணமுளைக்க முனைவார்.

இதனாலேயே எமது பகுதிகளில் திருட்டுச்சிறுவர்களின் எண்ணிக்கை நாள் தோறும் அதிகரித்து வருகின்றது. இவ்வாறான செயல்களில் ஈடுபடும் இவர்களால் குடும்பம் கௌரவம் இழந்து சமூகத்தால் புறக்கணிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

### பிள்ளைகளின் பழக்கம்

குடும்ப சூழ்நிலை பாதிப்பு காரணமாக விரக்தியடைந்த பிள்ளைகள் தாமும் குடித்தால் என்ன எனச் சிந்திக்கிறார்கள்.இதனால் அடிமட்டமான நண்பர்களுடன் கூட்டுச்சேர்ந்து மதுப்பாவனை, புகைத்தல் மற்றும் துர்ப்பழக்க வழக்கங்களுக்கு ஆளாகின்றனர்.

குடும்பத் தலைவர் இதைத் திருத்த முற்படுகையில் தமது செயல் சரியென நியாயப்படுத்த முனைவதோடு அவர்களிடமே மதிப்பற்ற முறையில்நடக்க முனைவர். அத்துடன் அப்பழக்கவழக்கங்களை சாதாரணமாகவே கூச்சமின்றிக் கைக்கொள்ளமுனைவர்.

இதனால் பெரியோரை மதிக்கும் பண்பு, நீதிக்கு பயப்படல் போன்றன பயன் அற்றதாகின்றன.

### பாலியல் சீர்கேடுகள்

தனக்கென சேர்த்துக் கொண்ட கூட்டத்தோடு சேர்ந்து மதுவிலும் புகையிலும் மூழ்கியிருக்கும் இவர்களுக்கு சாதாரண படங்களைத் தாண்டி பாலியல் உணர்வுகளைத் தூண்டும் அடிமட்ட படங்களை பார்க்கும் ஆவல் தோன்றுகின்றது.

அப்படங்களில் தான் பார்த்துரசித்ததைநிஜவாழ்விலும் அனுபவித்தால் என்ன? என்கின்ற எண்ணத்தால்பீடிக்கப்பட்டஇவர்கள் திருத்துவதற்கு யாருமற்ற நிலையில் பெண்கள், சிறுவர்கள் மீதானதமது சேட்டைகளை சிறிது சிறிதாகத்தொடங்கிபின்னர்பாரதூரமான பாலியல் பலாத்காரங்கள் ஏன் கொலைகள் வரை ஈடுபடத் தயங்காதவர்களாகி விடுகின்றனர்.

### தனக்கெனத் தொழிலின்மை

எப்படியும் வாழலாம் என்ற நோக்கில் செயற்படும் இவர்களுக்கு குடும்பப்பாரம், பொறுப்பு, கடமை என்பன இல்லாதுபோகவே தனக்கென கௌரவமான தொழில் ஒன்றினைத் தேட வேண்டுமென்பதைப் பொருட்டாகக் கருத மாட்டார்கள்.

ஏதாவது கூலிவேலை செய்தாகிலும் வயிறு நிறையக் குடிப்பதற்கு மட்டும் பணம் சம்பாதித்தால் போதும் என்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டிருப்பார்கள்.

இதனால் உள்ளூர்ச் சட்டவிரோதக் கொட்டகைகளில் 'கசிப்பு'' எனப்படும்மதுவில் சிக்குண்டு சேமித்த பணத்தைத் தொலைத்து விடுகின்றனர். குடும்ப நிலை பற்றிச் சிறிதும்சிந்திக்காது அன்றைய பொழுதை மது மயக்கத்தில் களிப்பதிலேயே குறியாயிருப்பார்கள்.

### இதற்கான தீர்வுகள்

- குடிபோதையில் வருபவருடன் கதைவைப்பதைக் குறைத்தல்.
- மதுமயக்கம் தெளிந்த நிலையிலுள்ள போது மிகவும் அன்பாக அவரது பிழைகளைச்சுட்டிக்காட்டல்.
- அப்பிழைகளை எவ்வாறு திருத்தலாம் எனக் கலந்தாலோசித்தல்.
- குடும்பம் அவரது கையில் தங்கியுள்ளது என உணர்த்தல்.
- குடும்பக் கௌரவம் முக்கியமென்பதையும் அது அனைவரது வாழ்வையும் செழிப்பாக்குமென எடுத்துரைத்தல்.
- வீட்டிலேற்படும் பொருளாதாரச் சிக்கலுக்கு எவ்வாறு தீர்வுகாணலாமென அவரிடம்பரிந்துரை கேட்டல்.
- இயன்றவரை குடும்பத்தார்அனைவரும் அவரை மதித்து அவரது அன்பு குடும்பத்திற்குத் தேவையென்பதைத் தெரியப்படுத்தல்,
- அவரது சரியான கட்டளைக்காகவே குடும்பம் முழுவதும் காத்திருப்பதாக உணர்த்தல்.

இது போன்ற முறைகளை தொடர்ந்து குடும்பத்திலுள்ளோர் கைக்கொள்ளும் பட்சத்தில் அவரது மனம் மாற்றமடையும். அவர் தனது பொறுப்புகளையும்,கடமைகளையும் உணர்ந்துகொள்வார். தனது முக்கியத்துவத்திற்கேற்ப தனது குடும்பத்தைத்தானேநடத்த வேண்டுமெனத் தீர்மானமெடுப்பர். தொடர்ந்துமதுவிலிருந்துவிடுபடதானே வழி தேடுவார்.

### இளைஞர்களின் பங்கு

எதிர்காலமென்பது இளைஞர்கள் கையிலே தான் தங்கியுள்ளது இன்றைய இளைஞர்கள் நாட்டின் நாளைய தலைவர்களென்பது உண்மை. எனவே இளைய சமுதாயம் இந்த விடயத்தில் விழிப்புடன் செயற்படுவது அவசியமாகின்றது.

தமது குடும்பத்தில் அக்கறையுடையவராக இருந்து ஒவ்வொரு விடயத்திலும் குடும்ப நலன் பேணவே முயல வேண்டும்.

தான் பங்கெடுக்கும் கழகங்கள், மன்றங்கள், விளையாட்டிடங்கள், ஏனைய சூழல்கள் போன்றவற்றில் குடிபோதைக்கெதிரானபிரச்சார நடவடிக்கைகளில் நாள் தோறும்ஈடுபடல் வேண்டும்.

குடிபோதையில் உள்ளவரைச்சந்திக்க நேர்ந்தால் அவரை அதிலிருந்து விடுவிக்கும் நடவடிக்கைக்கு உதவும் விதத்தில் குடும்பப் பின்னணியை ஆராய்ந்து செயற்படுதல்வேண்டும்.

(2ஆம் பக்கம் பார்க்க)



### சாயி அருளமுதம்

காரண காரியங்களையிட்டு வாது புரிவதனாலோ, யோகப் பயிற்சிகளினால் உடலை வருத்துவதன்மூலமோ, சந்நியாசத்தை மேற்கொண்டு பலவற்றைத் துறப்பதனாலோ இறைவன் அருளைப் பெற்றுவிடமுடியாது.அன்பினால் மட்டுமே அதை வென்றெடுக்க முடியும். கைமாறு கருதாத அன்பு; பேரம்பேசுதலை அறியாத அன்பு: அன்பேயுருவான இறைவனுக்கு மகிழ்ச்சியுடன் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்படும் அன்பு; கலக்கமுறாத.நிலையான அன்பு ஆகியவைதான். எத்தனை அதிகமான அல்லது எவ்வளவு சக்தி பொருந்திய தடைகள் முற்படினும் அவையாவற்றையும் தாண்டிச் செல்லக்கூடியது அன்பு மட்டுமே. தூய்மையிலும் பார்க்கக் காரிய சித்தி அளிக்கக்கூடிய வலிமையோ, அன்பிலும் பார்க்கக்கூடிய திருப்தியை அளிக்கவல்ல இன்பமோ, பக்தியைவிட அமைதி பயக்கக்கூடிய மகிழ்ச்சியோ,சரணாகதியைவிடப் போற்றப்படக்கூடிய வெற்றிப் பெருமிதமோ கிடையாது.

நன்றி
**நாளாந்த நற்சிந்தனை**

# முன்னாள் ஜனாதிபதியின் மருமகனுக்கு பிணை அனுமதி

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையில் பெறுமதிமிக்க அற்புத ஓவியங்கள் திருட்டுப் போனமை தொடர்பாக கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிறேமதாச வின் மருமகன் றொகான் ஜெயக்கொடி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

1998ஆம் ஆண்டு ஜனாதிபதி மாளிகையிலிருந்த அற்புதமான அழகிய பெறுமதிமிக்க ஓவியங்களை திருடினார் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த புதன்கிழமை இவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இவரை விடுதலை செய்யுமாறு கோரி கொழும்பு கோட்டை நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தபோதும் அவரை விடுதலை செய்யும் அதிகாரம் தமக்குகிடையாது என்று கோட்டை நீதிமன்றம் மனுவை நிராகரித்தது.

இவ்வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, நீதிபதி டட்லி கருணாரட்ண சந்தேகநபரை ஐம்பதாயிரம் ரூபா காசுப் பிணையிலும், ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் நேற்று விடுதலை செய்து மாதத்தில்வரும் முதலாவது சனிக்கிழமைகளில் குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஒப்பமிட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

(வ-இ)

# மாணவனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். முத்துத்தம்பி வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் ஒருவனை 28 ஆம் திகதி முதல் காணவில்லை என பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சோதிராஜா நிஷாந்தன் [வயது 20, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்] என்பவர் கடந்த 28 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்ட போதிலும் இதுவரை அவர் வீடு திரும்பவில்லை என கூறப்படுகிறது.

பிரஸ்தாப மாணவன் 2001 ஆண்டு வர்த்தகப் பிரிவில் கல்வி கற்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [ந-12]

# பாசையூரிலிருந்து ஷெல்வீச்சு; மக்கள் அச்சம்

பாசையூர், ஈச்சமோட்டைப் பகுதியிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து ஏவப்படும் ஷெல்களினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

இராணுவ முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல்களில் பெரும்பாலானவை பூநகரி, கல்முனைப் பகுதிகளில் வீழ்ந்து வெடிப்பதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவத்தை அடுத்து மேற்படி பகுதிகளில் மீளக் குடியேறிய மக்களிடையே பதற்றமேற்பட்டுள்ளது. (வ)

## யாழ்.மாவட்டத்தில் சொட்டு மருந்து

# திட்டமிட்டபடி டிச.2 இல் வழங்கப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

திட்டமிட்டபடி 2ம் திகதி சனிக்கிழமை போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணி இடம் பெறமாட்டாது என்று யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காலநிலை சீரின்மையால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் கப்பல் சேவை நடைபெறாமையினால் போலியோ தடுப்பு சொட்டு மருந்தை எடுத்துவர முடியவில்லை.

இதனால் திட்டமிட்டபடி டிசம்பர் 2ம் திகதி தடுப்பு மருந்து வழங்கப்படமாட்டாது என்றும், விமான மூலமாக இச் சொட்டு மருந்தை கொண்டுவர முடியுமானால், மருந்து எடுத்து வரப்பட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், மருந்து கிடைக்காமல் போனால் சொட்டு மருந்து வழங்கப்படக் கூடிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும், திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (வ)

# விலையேற்றத்தைஎதிர்த்து ஐ.தே.க போராட்டம்!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசு அண்மையில் மேற்கொண்ட விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து ஐக்கிய தேசியக்கட்சி தொடர் போராட்டங்களை நடத்தப் போவதாக கட்சியின் உப தலைவர் காமினி அத்துக்கோரளை அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 3ம்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் இது குறித்த தீர்மானம் எடுத்துப் போராட்டம் நடத்தப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில்எரிபொருளின் விலையும் நேற்று முன்தினம் மாவின் விலையும் அதிகரித்திருந்தமை தெரிந்ததே. (வ)

# கொழும்பில் பாண் ரூ 9.50

(கொழும்பு)

கொழும்பில் 4.50 வீதம் கொண்ட பாணின் விலை 9.50 சதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மாவின் விலை கிலோ ஒன்றுக்கு 2 ரூபா அதிகரிக்கப்பட்டமையைத் தொடர்ந்து ரூ.8.50 சதமாகஇருந்த 4,40 கிறா பாணின்விலை தற்போது 9.50சதமாக விலை நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

# படையினரின் தாக்குதலில் மூன்று பங்கர்கள் சேதம்

அரியாலையில் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளின் மூன்று பங்கர்கள் சேதமடைந்து 17 புலிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு தரப்பு அறிவித்துள்ளது.

இதேவேளை வெலிஓயா, திருகோணமலை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் நான்கு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துளது. (இ)

# அனுராதபுரத்தில் கிரனேட் மீட்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் வியாபாரி ஒருவரின் பையினுள் வைக்கப்பட்டிருந்த மூன்று கிரனேட்டுக்கள் பொலிஸாரினால் நேற்றுக்காலை 8-30 மணிக்கு மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை மதவாச்சி புகையிரத நிலையத்தில் டோர்ச்லைட்டுக்குள் நேரங்கணித்துவெடிக்கக்கூடியகுண்டு ஒன்றையும் படையினர் மீட்டு செயலிழக்க வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# ஐவர் தடுப்புமுகாமில்

கடந்த 19 ஆம் திகதி காணாமல் போனதாகக் கூறப்பட்ட மட்டுவில் கமலாசினி வித்தியாலய மாணவன் உட்பட ஐந்து பேர் காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

சபாரத்தினம் இளையராஜா (வயது 18), கணபதி பொன்னம்பலம் (வயது 47) இராசையா ஸ்ரீரங்கநாதன் (வயது 29), தங்கவேலு ஜெயகாந்தன் (வயது 15), கந்தையா ஜெயகலா (வயது 15) ஆகியோரே காங்கேசன் முகாமில் உள்ளவர்களாவர். (ந-12)

# மலையக இளைஞர்கள் 37 பேர் நேற்று விடுதலை

(கொழும்பு)

மலையகப் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில்37பேர் நேற்று பிணையில் விடப்பட்டுள்ளனர்.

ஹற்றன் நீதிமன்ற நீதவான் சம்பத் விஜயரட்ண 37 தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்துள்ளார்.

மலையகத்தில் இடம்பெற்றுள்ள அசம்பாவிதங்களை ஒட்டி நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் சுமார் 65 இளைஞர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதுளை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கும் முறைகள் ஒழுங்காகப் பின்பற்றவில்லை என சட்டத்தரணிகள் வாதிட்டதை அடுத்தே நீதவான் 37 பேரையும் 10 ஆயிரம் ரூபா சரீரப்பிணையிலும் ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் விடுதலை செய்தார்.

இதேவேளை கடந்த வாரமும் 16 பேர் விடுதலை செய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

## அனைத்து...

டைகளை நீக்குவது, ஜனநாயக அரசியல் சக்திகளின் செயற்பாடுகள் மீதுள்ள ஆயுத அச்சுறுத்தல்களை அகற்றுவது போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்படுவது அவசியமானதாகும்.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினச் செய்திகளை கவனமாகச் செவிமடுத்தோம்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது மற்றும் மக்களின் வாழ்க்கைக்கு உகந்த சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவது என்பன தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஆர்வத்திற்குரியவை.

எனினும், இந்த உரையில் மக்களின் நலன் மற்றும் சர்வதேச உறவுகள் போன்ற முக்கிய விடயங்களில் காணப்படும் முன்னுக்கு பின் முரணான கருத்துக்களும், யுத்த முனைப்புகளும் கவலைக்குரியவையாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பிரபாவின்...

கிறது.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனமொன்று வவுனியாவில் உள்ளபல்வேறுமக்களிடையே எடுத்த பேட்டிகளிலிருந்து இது தெரியவந்துள்ளது. (வ)

## சந்தேகநபர்க...

பட்டனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக சித்தாண்டி இராணுவ முகாமில் இடம் பெற்றஅடையாள அணிவகுப்பில், படுகொலைச் சம்பவத்தைநேரில் கண்ட பதின்னான்கு வயதுச் சிறுவன் பொ.சந்திரகுமார் இரு இராணுவச் சிப்பாய்களை அடையாளம் காட்டினார்.

அடையாளம் காணப்பட்ட இரு சிப்பாய்கள் உட்பட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு சிப்பாய்களையும் 233 வது படைப் பிரிவின் தளபதி டி. எம். எஸ் பெரேராவிடம் ஒப்படைக்குமாறு மட்டக்களப்புமாவட்ட நீதிபதி அப்துல் கபூர் பொலிஸாருக்குஉத்தரவிட்டுள்ளார் (இ)

## இனப்பிரச்சினை--

நிலையிலேயே ஜனாதிபதி லண்டனுக்கு புறப்பட்டுச் சென்றார்.

நோர்வே அரசின் சமாதான முயற்சியும், பிரிட்டிஷ் அரசின் சமாதான முயற்சிக்கான ஆதரவும் ஜனாதிபதி சந்திரிகாவின் ஐரோப்பிய நாடுகளுக்கான விடயத்தில் வெற்றியைக் கொடுக்குமென உலக அரசியல் அரங்கில் பரவலாகப்பேசபடுகிறது.

இலண்டன் சென்றிருந்த ஜனாதிபதி அங்கு எலிசபெத் மகாராணியை அவரது பாக்கிங்காம் மாளிகையில் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பான முக்கிய அம்சங்கள் குறித்தும் இனப்பிரச்சினையின் தீர்வில் நோர்வே அரசு எடுத்து வரும் முயற்சியும், நோர்வேயின் சமாதான முயற்சிக்கு பிரிட்டிஷ் வழங்கி வரும் ஆதரவும், ஒத்துழைப்பும் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் றொனி பிளேயரையும் ஜனாதிபதி சந்திரிகா சந்தித்து இனப்பிரச்சினைக்கு அர்த்த புஷ்டியான தீர்வொன்றை காண வேண்டிய அவசியம் பற்றி கலந்துரையாடினார். இச்சந்திப்பு 15 நிமிடங்கள் இடம் பெற்றது.

கடந்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் பீற்றர் ஹெய்னையும் ஜனாதி சந்தித்துத்துப் பேசியுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு நிதி உதவி வழங்கிவரும் நாடுகளின் கூட்டமொன்றுஅடுத்த மாதம் 18,19 ஆகிய திகதிகளில்பாரிஸில்நடைபெறவிருப்பதால் அக்கூட்டத்திலும் ஜனாதிபதி கலந்து கொள்வார் எனவும், அப்போது இலங்கையின் உள்நாட்டு விபரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசியல் தலைவர்களுக்கு ஜனாதிபதி விளக்கம் கொடுப்பார் எனவும், ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஜனாதிபதியின் ஐரோப்பிய நாடுகளின் விஜயத்திற்கு அந்நாட்டுத் தலைவர்கள் ஆதரவு அளித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## சாவகச்சேரி...

பதற்கு பதிவு செய்திருப்பதால் அவர்கள் கட்டம் கட்டமாக ஆவணங்ளை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [வ-23]

## லங்கா...

நாளை காலை 7 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்துக்கு பயண ஆயத்தங்களுடன் வருமாறு சிவில் நிர்வாகக் காரியலாயம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை டிசம்பர் மாதம் 13ந்திகதி வரைக்கான விமானப் பதிவுகள் நிறைவடைந்துள்ளதாகவும் மறுஅறிவித்தல் வரை விமானப் பதிவுகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் 'றான்' இணைப்பாளர் எஸ். குகராஜன் தெரிவித்தார்.

எனினும் பாதுகாப்பு அனுமதிகளை றான் அலுவலகத்தில் பார்வையிட முடியும். ந)

## கடற்புலி...

ஈகைச் சுடரை ஏற்றுவதற்கான பிரதான கேடயமும் மலர் வளையமும் ஆழ்கடலுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பீரங்கி பொருத்தப்பட்ட படகிலிருந்து மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட, கடற்புலிகள் கடலுக்குள் குதித்து வட்டவடிவில் நீந்திய படி இருக்க ஈகைச்சுடர் நடுக்கடலில் வைத்து ஏற்றப்பட்டது. [ந]

ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
தபு, ஜோதிகா, இலட்சுமி நடிப்பில்
'சிநேகிதியே'
(மர்மங்கள்நிறைந்தபடம்)
புதிய வெளியீடு
10.30—2-30(ப.நேரம்)
[கி-688

விற்பனையாகின்றது
G.C.E O/L 2000பரீட்சைக்கான
முற்றிலும் எதிர்பார்த்த வினாக்களுடனான சகல பாட வினாத்தாள்கள் விடைகளுடன்
தரம் 10,11ற்கான வணிகக் கல்வியும் கணக்கீடும்
கிடைக்கும் இடங்கள்
யாழ்நகரபிரபல புத்தகசாலைகள்
வெளியீடு;-முன்னோடிப் பரீட்சைகள்நிறுவனம்
இலங்கை (☎-2578)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.